மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) ஆம், வேலூரிலுள்ள சிறப்பு, மாவட்ட விவசாய அலுவலர் (வாழை) இதற்கான திட்டக் குறிப்பை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அக்குறிப்பு கிடைத்ததும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

Adayar foot bridge.

* 288 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that the foot bridge over Adayar river linking the Elliots Beach with Foreshore Estate had cracked on 1st December 1969;

(*b*) if so, the details thereof;

(*c*) the total amount spent for the construction of the original bridge; and

(*d*) the estimated cost of reconstruction of the bridge?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) அடையாற்றின் மேலுள்ள நடை பாலம் 20—11—1969 இரவு பழுதடைந்தது.

(இ) நடைபாலத்தில் உள்ள 17 கண்வாய்களில் 3 கண்வாய்கள்தான் நீரை வெளியேற்றிக்கொண்டிருந்தன. மற்றவைகள் மணல்திட்டினால் மூடப் பட்டுவிட்டன. அதிக மழைபெய்ததாலும் தண்ணீர் வெளியேற்றுவதற்கு இடம் குறைந்ததாலும் ஏற்பட்ட நீர்ச்சுழலினால் வடக்குப் பக்கத்திலிருந்து 9-வது தாங்குச் சுவரின் அடிப்பாகம் அரிக்கப்பட்டு 4 அடி 3 அங்குலம் ஆழத் திற்கு தண்ணீரில் மூழ்கிவிட்டது. தாங்குச் சுவரின்மேல் பொருத்தப்பட் டிருந்த விட்டமும் தண்ணீரில் அமிழ்ந்துவிட்டது.

(உ) ரூபாய் 5,92,539-13.

(எ) ரூபாய் 19,450.

DR. H. V. HANDE: May I know whether reconstruction is over? If so, may I know the date on which the repair was made?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: 10—4—1970-இல் செப்பனிடும் வேலை நடந்து முடிவடைந்துவிட்டது.

Electricity supplied to agriculturists in Thiruchiroppall district.

* 289 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government are aware that the South Madras Electric Supply Corporation, Tiruchirappalli is charging Rs. 0-12½ per unit for the Electricity supplied to the agriculturists of Tiruchirapalli; and

(*b*) if so, whether the Government have any proposal to instruct the Corporation to reduce the charges?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது அவர்கள் தாராளமாகப் பேசலாம், அதன் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது, எனவே உறுப்பினர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மின் பங்கீட்டுப்பிரிவு, கன்னியாகுமரி.

*290. வினு—திரு. ஏ. பாலையா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மின் திட்டத்திலிருந்து வள்ளியூர், நாகர்கோவிலாகிய இரு மின் கோட்டங்களையும் பிரித்து கன்னியாகுமரி மின் திட்டம் என்ற பெயரில் ஒரு பிரிவு நாகர்கோவிலை தலைமை இடமாக கொண்டு நிறுவ செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. பாலையா : கன்னியாகுமரி மாவட்டத்தைத் தனி மின்திட்ட மாவட்டமாக 1971-72-க்குள் நிறுவ அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குத்தான் சொன்னேன் பரிசீலனையில் இருக்கிறது என்று.

கோவை முன்னுள் படையினரின் மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கம்.

*291 வினு—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, முன்னுள் ராணுவத்தினருக்கான மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து 7—7—1971 நாள் அளவில் அரசுக்கு முறையீடு ஒன்று வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பேருந்து அதிபர் ஒருவர் 10 பேருந்து அனுமதிச் சீட்டுகள் வரை தான் வைத்திருக்கலாம் என மேல் வரம்பு வரையறுக்கும் 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாவது திருத்த) அவசரச் சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து முன்னுள் படையினரின் மோட்டார் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிக்க வேண்டுமெனச் சங்கம் கோரியது. இந்த கோரிக்கை அரசால் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டு மறுக்கப்பட்டது. அவ்வண்ணமே சங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள சிற்பிகள்

*292 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலம் முழுவதும் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதிகள் எத்தனை பேர் உள்ளனர் ?

(இ) அவர்களுக்கு தொழில் நிமித்தம் கடன் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?